மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு, ஐந்து பேர்களை என்று சொன்னது தங்களுடைய கட்சியைக் குறிப்பிடவில்லை யென்று சொல்கிறார்கள். நானும் கருதுகிறேன். நானே சொல் கிறேன்.

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணர்ச்சி அதிகமாக இருக்கக் கூடாது. பொறுமையோடு தான் காரியங்களை நடத்திக் கொண்டு போகவேண்டும். 'பொறுமை' என்று எழுதி வைத்திருக்கிறேன். 'பொறுமை' என்று எழுதப்பட்டிருக்கிற இந்த சீட்டைக் கூட (பேரவைக்குக் காட்டி) வைத்திருக்கிறேன். ஏனென்றால் பொறுமை வேண்டும் இன்றைக்கு. அதற்காகத்தான் எழுதி வைத்திருக்கிறேன். அடுத்த வினா . . .

(ஹாஜி ம. மு. பீர் முஹம்மது எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் பொறுங்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கம் தங்களைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி சொல்லக் கூடாது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய கட்சிகள், சிறுபான்மையினர் ஆகியோருக்கு எந்த அளவுக்கு இந்த நாட்டில் மதிப்பளிக்கப்பட வேண்டுமென்று நம்முடைய மதிப்பிற்குரிய உயர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு விளக்கம் கூறியிருக்கிறார்கள். "கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவை செம்மையான ஜனநாயகத்திற்கு இன்றியமையாதவை. எனவே சிறுபான்மையினர் கருத்தை மதிக்க வேண்டும். உண்மையில் ஜனநாயகத்தில் எப்பொழுதும் எதிர்க்கட்சி இருக்கும். அது எண்ணிக்கையில் வலுவில்லாததாய் இருக்கலாம். அதனால் அதற்கு அரசியல் மதி நுட்பம் இல்லை என்றாகாது" என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆதலால், எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய நாங்கள் வலுவில்லாத வர்களாய் இருக்கலாம். ஆனால், அரசியல் மதி நுட்பம் எங்களிடம் அதிகம் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, எங்களுக்கு மதிப்பளிக்காத முறையில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் கூறக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்ன அளவில் தான் இருக்கிறது. அதைத் தான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் பொறுப்புள்ள ஒரு தலைவர் சொன்னதை ஆதாரமாகக் காட்டியிருக்கிறீர்கள். நன்றி.

பரப்பலாறு, பொருந்தலாறு அணைக்கட்டு திட்டங்கள்

* 330 **வினா.—திரு. கரு. சீமைச்சாமி** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பழனித் தாலுகாவில் உள்ள பரப்பலாறு, பொருந்தலாறு அணைக்கட்டு திட்டம் எப்போது மேற்கொள்ளப் படும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து, அவ்வத்துறைத் தலைவர்களுடன் கலந்து ஆராயப்பட்டு வருகின்றன. இவ்வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன்பு திட்டக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த வேலைத் திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றினால், எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற முடியும் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிற கொள் அளவு 167 கோடி கன அடியாகும். புதியதாக பாசனத்திற்கு வருவது 1,000 ஏக்கராவாகவும், ஏற்கெனவே இருக்கிற பாசனத்தை உறுதிப்படுத்துவது 1,323 ஏக்கராவாகவும் இருக்கும். இதில் ஒரு டன்னுக்கு செலவு ரூ. 3,000-க்கு மேலாகிறது. அதாவது ரூ. 5,081 என்கின்ற அளவுக்கு ஒரு டன்னுக்கு செலவு ஆகிறது. இதற்காகப் போடப்பட்டிருக்கிற மொத்த மதிப்பீடு ரூ. 35.57 இலட்சமாகும்.

திரு. நா. காசிராமன் : இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை அளவு உணவுப் பொருள்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுநூறு டன் கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

Motor Vehicles Taxation Sub-Inspectors, etc.

* 331 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that some posts of Motor Vehicles Taxation Sub-Inspectors, Head constables and constables have been abolished with effect from 31st August 1967;

(*b*) the date from which these posts were in existence; and

(*c*) the probable savings on this account?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) மோட்டார் வண்டிகள் வரி வசூல் குறித்த பணியில் நியமிக்கப்பட்டிருந்த 14 உதவி இன்ஸ்பெக்டர்களும் 20 தலைமைக் காவலர்களும் 1—9—1967 அன்று முற்பகல் முதற்கொண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

(இ) பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப் பட்டுள்ளது.

(உ) தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 95,490 மிச்சமாகும்.

திரு. நா. காசிராமன் : 1931-ம் வருஷத்திலிருந்தே 14 ஸப்-இன்ஸ்பெக்டர்கள், 20 ஹெட் கான்ஸ்டபிள்கள் இருந்து மோட்டார் வாகனங்கள் வரி ஏய்த்தல், வேகமாக செல்லுதல், கள்ளக் கடத்தல் ஆகியவைகளைச் செக் செய்து, இந்தக் குற்றங்

@ 499–503ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது